ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1714/1 - 2011 ජූලි 11 වැනි සඳුදා - 2011.07.11
1714/1 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.-பீ. 94/47* III.

**(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்**

6 (2) (ஆ) மற்றும் 21 (2) (ஆ) என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை

(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6 (2) (ஆ) என்னும் பிரிவினாலும், 21 (2) (ஆ) என்னும் பிரிவினாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் -

(அ) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்படும் காணி இடப்பரப்பு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்திற்காக நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாதல் வேண்டுமென்பதுடன் "கிரிதிகல்ல சிறீ விஷ்ணு தேவாலய புனித இடப்பரப்பு" என அழைக்கப்படுதலும் வேண்டுமெனவும் வெளிப்படுத்துகின்றேன் ; அத்துடன்

(ஆ) "கிரிதிகல்ல சிறீ விஷ்ணு தேவாலய புனித இடப்பரப்பு" ஆக வெளிப்படுத்தப்பட்ட முழு இடப்பரப்புக்காகவும் உருவரைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமெனப் பணிக்கின்றேன்.

விமல் வீரவன்ச,
நிர்மாண, பொறியியல் சேவைகள்,
வீடமைப்பு மற்றும் பொது வசதிகள்
அமைச்சர்.

நிர்மாண, பொறியியல் சேவைகள்,
வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு,
கொழும்பு,
2011, யூன் 30.

**கவனிக்க.**- 1713/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானித் தொடரின் இறுதி இல. 1713/ 35 ஆகும்.

**அட்டவணை**

கிரிதிகல்ல சிறீ விஷ்ணு தேவாலய புனித இடப்பரப்பைக் கொண்டுள்ள காணி இடப்பரப்பு

வட மேல் மாகாணத்திலுள்ள குருநாகல் மாவட்டத்தில் இப்பாகமுவ பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கிரிதிகல்ல கிராம அலுவலர் பிரிவினுள் கிரிதிகல்லக் கிராமத்தில் அமைந்துள்ளதும், 2010, பெப்புருவரி 3 ஆந் திகதிய நிலஅளவையாளர் தலைமையதிபதியின் சுவடியெடுத்தல் இல. கேயூ/ஐபீபீ/2010/34 (இகிவ இல. 1170) என்பதன்மூலம் காட்டப்பட்டதும், பரப்பளவில் 2.4226 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளதுமான காணி இடப்பரப்பு; அதன் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இல. 2 ;

கிழக்கு : காணித்துண்டு இல. 2, 27 மற்றும் 26 ;

தெற்கு : காணித்துண்டு இல. 30, 25, 24 மற்றும் 2 ;

மேற்கு : காணித்துண்டு இல. 2 மற்றும் 3.

7 - 621

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.